03 JAN 2011

சுருக்கம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – வேலூர் மாவட்டம் – வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூ.1,295 கோடி மதிப்பீட்டில் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் பரிந்துரை – நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1) துறை

அரசாணை (நிலை) எண்.319 நாள்:31.12.2010

மார்கழி 16, திருவள்ளுவர் ஆண்டு 2041.

படிக்க:

1. வாரிய தீர்மான எண்.2.18, நாள் 15.12.2010.
2. அதிகாரமளிக்கப்பெற்ற குழு தீர்மான எண்.3, நாள் 27.12.2010.
3. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண். கோ. வேலூர் கூ.கு.தி./ உ.பொ.6 / திமேபி/ 2010, நாள் 27.12.2010.

*****

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட வாரியத் தீர்மானத்தில் வேலூர் மாவட்ட கூட்டுக் குடிநீர் திட்டத்தினை செயல்படுத்த அரசின் நிர்வாக ஒப்புதல் பெறும் பொருட்டு, அரசுக்கு பரிந்துரை செய்வதற்கு, அதிகாரம் அளிக்கப்பெற்ற குழு கூட்டத்தில் வைக்கலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2) அதன்படி, பார்வை 2–இல் படிக்கப்பட்ட அதிகாரம் அளிக்கப்பெற்ற குழு பின்வரும் தீர்மானங்களை அரசுக்கு பரிந்துரைத்தது :-

(i) வேலூர் மாவட்டத்தில் உள்ள வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தினை ரூ.1,295 கோடி அமைப்புச் செலவிலும், ரூ.58.20 கோடி, ஆண்டு பராமரிப்புச் செலவிலும் செயல்படுத்த, நிர்வாக ஒப்புதல் வழங்க வேண்டியும், 10 விழுக்காடு அரசு மான்யத்திலும், 90 விழுக்காடு நகர்ப்புர வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் கடனுதவி பெற்றும், செயலாக்கம் செய்யவும், மேலும், இத்திட்டத்தில் சுத்திகரிப்பு நிலையம் உள்ளடக்கிய தொகுப்புக்கான பணியினை ஒப்பந்தக்காரரே வடிவமைத்து, கட்டி, இயக்கி பராமரித்து பின்ஒப்படைப்பு செய்யும் (Design, Build Operate and Transfer - DBOT) முறையில் செயல்படுத்தவும், இப்பணிகளை அந்த ஒப்பந்ததாரரே 5 ஆண்டு காலம் பராமரிப்புச் செய்யவும் மற்ற தொகுப்புகளுக்கான பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய வடிவமைப்பின்படி

செயல்படுத்தப்படவுள்ளதால் இந்த தொகுப்பு பணிகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரே ஓராண்டுகால இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ளவும்;

(ii) இத்திட்டத்தில் பங்குபெறும் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளும் செலுத்த வேண்டிய விகிதாச்சாரத் தொகையினை கணக்கிட்டு, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க இயலும் கடன் தொகையினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு தெரிவிக்குமாறும், மீதமுள்ள தொகையினை அரசு மான்யமாகவும் பெற்று செயல்படுத்த அரசுக்கு தெரிவிக்கவும் தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தை கேட்டுக் கொள்ளவும்;

(iii) வேலூர் மாநகராட்சி மற்றும் சம்பந்தப்பட்ட நகராட்சிகளில் செயல்படுத்தப்படவுள்ள பகிர்மானக் குழாய் அமைப்பு பணியினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் தங்களது விருப்பப்படி தாங்களே செயல்படுத்தலாம் அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தலாம் என்பதற்கும் ;

(iv) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து வசூலிக்கப்படும் குடிநீர் கட்டணம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் பொதுமக்களிடமிருந்து பெறும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை உயர்த்துவது குறித்து பரிசீலிக்கவும், உயர்த்தப்பட்ட குடிநீர் கட்டணம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்பும், இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவினத்திற்கும், பயனாளிகளிடமிருந்து பெறப்படும் குடிநீர் கட்டணத்திற்கும் இடையே ஏற்படும் பற்றாக்குறையினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரிப்புச் செலவாக அரசிடமிருந்து மான்யமாகப் பெறவும் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

3) அதிகாரம் அளிக்கப்பெற்ற குழு கூட்டத்தின் தீர்மானத்தினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனடிப்படையில், வேலூர் மாவட்டத்தில் உள்ள வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரகக் குடியிருப்புகளுக்கு மேட்டூர் அணை கீழ்ப்புறம் செக்கானூர் அருகே காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டத்தினை ரூ.1,295 கோடி அமைப்புச் செலவிலும், ரூ.58.20 கோடி ஆண்டு பராமரிப்புச் செலவிலும் செயல்படுத்த, நிர்வாக ஒப்புதல் வழங்கியும், இத்திட்டத்திற்கு தேவையான தொகையினை, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகை ரூ.272.15 கோடியினை குறைந்த பட்ச தேவைத்திட்டத்தின்(MNP) கீழ் அரசு மான்யமாகவும் (Grants), நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவற்றின் கடன் திருப்பி செலுத்தும் திறனை, தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) மூலம் மதிப்பிடப்பட்டு அதற்கேற்ப கடன்தொகையை மட்டும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறவும், மீதி தொகையை அரசு மானியம் (Grants) வழங்கவும் அனுமதிக்கலாம். மேலும், தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL), தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD), வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனம் (HUDCO) போன்ற நிதி நிறுவனங்களில் எங்கு வட்டியும், கடன் நிபந்தனைகளும் சாதகமாக உள்ளதோ அங்கு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சார்பாக கடன் பெற்று, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கவும் நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும், இத்திட்டத்தில் சுத்திகரிப்பு நிலையம் உள்ளடக்கிய

தொகுப்புக்கான பணியினை ஒப்பந்தக்காரரே வடிவமைத்து, கட்டி, இயக்கி பராமரித்து பின் ஒப்படைப்பு செய்யயும் (Design Build Operate and Transfer) முறையில் செயல்படுத்தவும், இப்பணிகளை அந்த ஒப்பந்ததாரரே 5 ஆண்டு காலம் பராமரிப்புச் செய்யவும் மற்ற தொகுப்புகளுக்கான பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய வடிவமைப்பின்படி செயல்படுத்தப்படவுள்ளதால் இந்த தொகுப்புப் பணிகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரே ஓராண்டுகால இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கியும் ஆணை வெளியிடப்படுகிறது.

4) இவ்வாணை நிதித்துறையின் 31.12.2010 நாளிட்ட அ.சா.கு எண். 284/ DS (B)/ 2010- ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை.5
<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை.9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.9
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை.9
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை.9
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், நிதித் துறை, சென்னை —9.
தலைமைச் செயலாளரின் தனிச்செயலாளர், சென்னை —9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, சென்னை— 9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, சென்னை—9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை.9
<u>நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை.5</u>
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை.108
இயக்குநர், ஊரக வளர்ச்சி, சென்னை.15
தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை.17
நிதி (நநிமகுவ) துறை, சென்னை.9
மாவட்ட ஆட்சியர், வேலூர் மாவட்டம்
இணைப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31/12/10
பிரிவு அலுவலர்